இது தேசிகப்பிரபந்தத்தில் 'நம்பாணன்' என்று திருப்பாணாழ்வாருக்குப்பெயரமைந்ததற்குக்காரணம் இன்னவெனக்கூறுவது. இயற்றியவர் இன்னாரெனத்தெரியவில்லை. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 84.

Palm-leaf. $14\frac{5}{8} \times 1\frac{3}{8}$ inches. Foll. 397. Lines, 7-9 to a page. Tamil. Fair.

Purchased in 1911-12 from Aruṇācala Ayyar of Mylapore.

கோலாசல ஸ்தலபுராணம்.

KŌLĀCALASTALAPURĀṆAM.

On the greatness and sanctity of the shrine dedicated to Raṅganatha at Kōlācala. This work is said to be a Tamil rendering of Adhyāyas 101—132 of the Sanskrit Liṅgapurāṇa.

Complete.

Beginning:

ஸ்ரீராம[ஜெ]சயம். ஹரிஓம். நன்றாக, குருவாழ்க, குருவேதுணை.

காப்பு.

சஞ்சீவி புரமாகிய சிம்மபுரம் கோலாசலஸ்த[ள](ல)புராணம்.
ஆனைமுதலானவனையழைக்கவருபரம்பொருளுக்கடிமையான
வானவர்கோனயனரனும்வந்துநெருக்குணும்வேலைமகுடகோடி
தானுலைந்துமேருவெனத்தனிப்பொடிகளுதிரவொளிர்தங்க
[வேத்[தி]ர
சேனைமுதலியார்கமலத்திருவடியேதஞ்சமெனச்சிந்தைசெய்
[வாம். (க)

வாழ்த்து.

விண்ணவர்கோ னயனரன்மா முனிவர் தேவர்
விரிமறைநூ லறம்வேள்வி மேன்மை ஞான
மண்ணவர்கள் பெருஞ்செல்வ மரசு செங்கோன்
மனுகுலத்தோ ரருணெறியும் வளர்ந்து வாழ்க[த்]
தண்ணமிர்தக் கோலவரை துயில ரங்கன்
சரிதைதனை வியாசமுனி சாற்றச் சூதர்
புண்ணியநே மிசர்க்குரைக்க மகிழ்ந்தா ரந்தப் [வார்.
புகழ்துதிப்போ[ற்](ர்) பாற்கடல்போற் பெருகி வாழ்

நூற்பயன்.

கல்வியுஞ் செல்வ மோங்குங் கருதிய தெல்லாங் கூடுஞ்
சொல்வளம் பெருகு ஞானச் சுகாநந்த வீடு மெய்தும்
பல்வளம் பொருந்துங் கோல வரைதுயி லரங்கன்பாதஞ்
சொல்பவர்படிப்போர்கேட்போர்சொற்படியெழுதுவோர்க்
[கே:

கடவுள் வாழ்த்து.

திருநன்மகுட குண்டலமுந் திகழுமூர்த்துவ புண்டரமுங்
கருவிலெனை யாட்கொண்ட திருக்கருணை விழியுமலர்வாயு
மருவைம்படைசேர்புயநான்குமலர்மாமகணுான் மணிமார்ப
னுருவுங்கனகவுடைப்பதமுமுற்றேனருளைப்பெற்றேனே.
(எ-து.) ஸ்ரீலக்ஷ்மீபதியாகியதிருவரங்கநாயக[ரிட](ருடைய)
திருமுடியி * * * * * *
* * * * * * *
மிகுந்தகருணையாலென்னி [ை]தயகமலத்தி [ன்](ல்)வீ[த்தி]

(ற்றி)ருக்கப்பெற்ற கி[று] (ரு)பாநோக்க விசேடத்தால் உமது பேரின்பமாகிய திருவருளினைப் பெற்றே னென்றவாறு. (க)

* * * * * * *

* * * * * * *

அவையடக்கம்.

சீதரனடியார் தீர்த்தமுஞ் சிரசிற் சிந்தையிலவன் றிருநாம
மோதரனயனரிந்திரன் முதலோருரைத்தடங்காப்புகழு
[ரைத்த
லாதரம்பெருக வண்டத்தைச் சுண்டன ளப்பதொத்திடுவ
[தாயினுமென்
றீதரக்கோலாசலத்துறையரங்கன் திருவடிதுதிப்பதுகட
[னே.

(எ-து.) ஸ்ரீலக்ஷ்மீபதியாக வரங்கநாத [ரிட](ருடைய) *
* * * * *

திவ்விய சரணாரவிந்தத்தைத் துதிப்பது கடமை என்றவாறு.

முதனூல் வழிநூல் செய்த காரணம்.

ஆதியில் வியாதன் சொல்ல வருமறை தெரிந்த ஞானச்
சூதருமுரைத்தார் நேமிவனத்துளோர்க்கென் றுஞ்சூ[ட்](ழ்ச்)சி
[வோ] (யோ)திய விலிங்கியத் தினூற்றொன்ரு மத்தியாயக்
காதைதழ வுலகோ ருய்யத் தமிழினூற் கழற லுற்றேன்.

(எ-து.) [யி] (இ)ந்தக்கோலாசல புராணமானது * *
* * * * *

வியாஸரானவர் * * * சூத[ப்] புராணிகருக்
குரைத்தபடி அவரும் நைமிசாரணியத்தாருக்கு அருளிச்செய்த
வரலாற்று மு[ற] (றை)மையாகிய காதையை யிலிங்கபுராண
த்தி [நூ](னூ)ற்றொன்ருமத்தியாயந்தொடங்கி முப்பத்திரண்
டத்தியாயமாகக் கூறுகின்ற திருவவதாரசரித்திரங்களை (த்)
தென்மொழியாகிய தமிழினாலே கூறுகின்றே னென்றவாறு.

புராண ஸங்கிரகமணி.

ஆதியின் முனிவோரயனருள தனையடைந்திடுநைமிசவனத்
[தின்
னீதிநான்மறையோனவதரித்ததுவுநேயமாமறைமொழிய
[தனை

வேதியர்க்குலகின் விதித்தது மூவாறாகியபுராணத்தினிலிங்க
மோதியவராகத் தலத்தின்முச்சிறப்பு முரைத்திடும் பரத்
[துவப்பொருளும்.

* * * * (க)

பூருவங்காலநேமியின்றவத்தாற்புகழ்பெறுமமரர்கண்மிகு
[ந்த [க்]
காருலகலைந்துகடல்பெரும்புவிசூழ்கானகக்கடுவனங்கடந்து
மேருவினடைந்த விதங்களையுணர்ந்த மேன்மைசேர் நார
[தன்மொழியாற்
பேருலகளந்தோன் பொன்னடியடைந்த புகழினைவிளம்
[பிய திறனும்.

* * * * (உ)

ஆதியின்வராகமா யவதரித்தங் கழகியகங்கை யாற்கருளிச்
சோதிசேர்சம்பிரத்தினாற்றுணித்துச்சோமகன் றனக்கரு
[ளியதும்
நீதிமா[ற்](ர்க்)கண்டர்க்கருள்புரிந்ததுவுநீள்பதமடைந்த
[நற்குகன் றன்
வேதனைதவிர வெற்பதாய்த்தோன்றி விமலனாங்கவற்
[கருள்செயலும்.

* * * * (ந)

அண்டர்கடுயர மகன்றிடக் காலநேமியாமசுரனை மடித்துப்
புண்டரீகக்கண்ணருளினானமரர்பொன்னுலகடைந்தநற்
[புகழுங்
கொண்டல்சூழ்கோலவரையினிற்றவஞ்செய்கோதையைத்
[திருமணம்புணர்ந்த
மண்டலமளந்தோனருளினாற்சூதன்மாமறைசவுனகர்க்
[கறைந்தான்.

* * * * (ச)

முதலாவது நைமிசாரணிய வத்தியாயம்.

ஆதியிற்சிறந்த வருந்தவநிதிக ளாகிய முனிவர ரியாருஞ்
சோதியாம்பரனைத்தொழுவதற்குரியதூயநின்மலமனதுள
[ராய்
நீதிநான் மறைநூனெறியறம்வேள்விநிறைதவமிழைத்தி
[டநினைந்து
[வோ](ஓ)திய[யி](வீ)ரேழுலகினு மிகுந்தவுயர்மனோவதி
[நகரடைந்தார்.

(எ-து.) ஆதிகாலத்திலே ஞானத்திற்சிறந்த அரிதாகிய தவத்தினைச்செய்கின்ற தவத்திரவியமாகிய முனிவர்களியாவருங் கூடி, சோதிமயமாகிய பரப்பிரமத்தைத் தொழுவதற்கு *
* * * * * *
பதினான்குலகத்திலும் மிகுந்த சிலாக்கியமான மனோவதியென்னுஞ் சிறந்த நகரத்தை யடைந்தார்களென்றவாறு. (க)

End :

இவ்வகையிற் றுதிதேவர் விடைகொண் டேக
விறையவன்செந் திருவைமணி மார்பில் வைத்துச்
செவ்விபெறும் பதுமமே லவனு ருந்தித்
திகழ்ந்திருட்டப (?) [னு] (நா)ரதர் கந்திருவஞ் செப்பக்
கொவ்வையித ழருந் [து] (த)தியார் கேள்வனியோகக்
கொள்கைபெறு கோசிகனர் பிருகங்கேத்தத்
திவ்வியமா [ற்] (ர்க்) கண்டன்சோ முகனேசம்பரன்
சேர்ந்துமிகு தித்தியராய்த் திகழ்ந்தாரன்றே.

(எ-து.)

மந்திராந்தாம்
தேவதாந்தாம்
பி [றை] (ர)யோசனாந்தாம்
சாதனாந்தாம்
பாகவதாந்தாம்.

(கு-பு.)—

இந்நூல், செஞ்சியென்று சிதைந்து வழங்கும் ஸஞ்சீவிகிரியின் விஷயமானது. இதில், நைமிசாரணியம் முதலிய சில க்ஷேத்திரங்களின்மகிமையும், திருமால் வராகமூர்த்தியாய்ச் சோமுகாசுரனை அழித்ததும், மார்க்கண்டேயர்முதலோர் திருமாலைச் சரணமடைந்ததும், கோலாசலமென்னும் சஞ்சீவிமலையின் வரலாறும், அதில் திருமால் அரங்கநாயகரென்னும் திருநாமத்துடன் அமர்ந்ததும், காலநேமிசயந்தன்முதலோரை ஜயித்ததும், திருக்கலியாணிமுதலிய தீர்த்தங்களின் வரலாறும் பெருமையும், கோலாசலத்தில் தவம்செய்த மகாலக்ஷ்மியை அரங்கநாயகர் திருமணஞ்செய்துகொண்டதும், இன்னும் இவற்றைச்சார்ந்த சில விஷயங்களும் கூறப்பட்டுள்ளன. இந்தப் பிரதியில் கடவுள்வாழ்த்து பாயிரம் நீங்கலாக 33 அத்தியாயங்கள் உள்ளன. இதில் எல்லாப்பாடல்கட்கும் பொழிப்புரையும் எழுதப்பட்டிருக்கிறது.

இலிங்கபுராணத்தில் நூற்றொன்றாமத்தியாயந்தொடங்கி முப்பத்திரண்டத்தியாயங்களில் இவ்வரலாறு கூறப்பட்டிருப்பதாக இந்நூற் பாயிரங் கூறுகின்றது. நூலாசிரியர் ஒரு வைஷ்ணவரெனத் தெரிவதன்றிப் பெயர்முதலிய விவரம் ஒன்றும் விளங்கவில்லை. இந்நூல் இந்தப் பிரதியில் முற்றுப்பெற்றதென்றே தோற்றுகிறது.

இதிலுள்ள அத்தியாயங்கள்.

R. No. 85.

Palm-leaf. $17\frac{7}{8} \times 1\frac{1}{2}$ inches. Foll. 199. Lines, 10 to a page. Tamil. Fair.

Purchased in 1911-12 from Isab Beg of Triplicane.

பார்க்கவ புராணம்.

BHĀRGAVAPURĀṆAM.

Similar to the work described under No. 450 of the D. C. T. MSS. Vol. I. The work described therein is in prose, while this is in poetry of some literary merit. It seems to be the Tamil rendering of the Sanskrit Gaṇēśa-Purāṇa. The author of the work is Tuṟaiśai Kacciyappamunivar, a disciple of Śivañāna-munivar of Tiruvāḍutuṟai ; and the work is said to have been composed at the instance of Cidambarabhūpan, son of Kandappan of the Tuluva community and the chief of a place called Kuḻandai.

The work here breaks off in the 5th Paṭala of the Līlākāṇḍa.

Beginning:

வெற்றிவேலுற்றதுணை.
பிரஸந்ந விநாயகர் துணை.

திங்களணி சடைப்பெருமான் பூசை யாற்றித்
திரிமதிலுங் கடந்திடமுன் னின்றான்யாவன்
றங்குகடற் புவிவரைப்பி னெடியோ னாதி
சகலருக்கு மு[று](ரு) தவிர்க்கின்றான் யாவன்
அங்கவன்மெய்ச் சரிதமொழி பெயர்ப்ப வேண்டி
யவனடியே சரணாக வடித்து ளோற்கு
மங்கலசின் மயமதுரத் தமிழ்ச்செம் பாடல்
வாரிமட மடையுடைத்து வளருமன்றே.

துன்முகி வரு கார்த்திகை மீ உ௰அ உ ஆதிவாரம் திருவோண நக்ஷத்திரத்தில் பா[ற்](ர்க்)கவபுர்ாணம் எழுத ஆரம்பித்தது.

முருகர் கிருபை உண்டாகவும்.

பா[ற்](ர்க்)கவபுராணம்-பாயிரம்.

அகரமெென வறிவாகி யுலக மெங்கு
மமர்ந்தகர வுகரமக ரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
பல்வேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில்பொரு ளுன்கினையு மிடர்தீர்ந் தெய்தப்
போற்றுநருக் கருட்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளு
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

* * * * *
* * * * *

வீறுபெறு மாவடுதண் டுறைநமச்சி
வாயனருண் மெ(ய்)ஞ்ஞா னத்தின்
கூறுதெரி கச்சியப்ப முனிவரன்றுன்
கோதிலெழுத் தாதி யென்னு
மூறுசுவைப் பா(ற்)றயிர் தேன்
கழை நீராழி கடைந் துலகிற்செய்யு
ளேறுசுவை யமுதளித்தான் விநாயகர்மான் மிய
விரத மினிப்ப மாதோ. (௰௧)

சொல்லார்ந்த புகழ்த்தொண்டை வளநாட்டிற் சிறந்த
துளுவர்குல சிகாமணியாம் கந்தப்ப னருளும்
வல்லாண்மைத் தடம்புயத்தோன் குளந்தையூர் வள்ளல்
மாமேரு காவலனும் வரம்பில்பெரும் புகழ்ழான்
வில்லார்ந்த வருட்சிவபுண் ணியக்கொழுந்தா யுலகில்
விளங்குசிதம் பரபூபன் விநாயகன்மான் மியத்தை
எல்லாரு முயத்தமிழா லருளுகெனத் தந்தான்
இருந்துறைசைக் கச்சியப்ப வெல்லையின்மா தவனே.
(௨௰)

அடுத்த விக்கதை பிரசன்ன விநாயக னருளால்
தொடுத்த லாலவ னுடைனுந் தொண்டைநாட் டினையும்

விடுத்தி டாவவன் சென்னைமா நகரையு மேன்மை
மடுத்த நாவலர் வியத்தக முந்துற வகுப்பாம். (உக)

பாயிரம் முற்றும்.

இப்பால் நாட்டுப்படலம்.

அண்டரும் புகழ்துண் டீர ணுண்டுதுண் டீரநாடாய்த்
தண்டகன் பின்ன ராண்டு தண்டக நாடாய்ப் பின்னர்த்
தொண்டைமா னுண்டு தொண்டை நாடெனத் துலங்கிற் றென்ப
பண்டயன் படைப்புத் தொட்டுப் பயிலுமித் தொல்லை நாடு. (க)

End:

அண்டகோடியு மகட்டிடை யடக்கிய வமலன்
மிண்டுதானவர் வியன் வயிற் றடங்குமோ வென்னக்
கண்டமாதவர் கைதொழு தாடினர் களித்தார்
வண்டுவார்குழ லன்னையு மதிமுக மலர்ந்தாள். (உஉஅ)

நெடுங்க மூத்தலாய் நிகழ்ந்தவைந் தாமெனு மாண்டி
னடுங்கொ லைத்தொழி லோடுகட் காசுர னடுப்பக்
கொடுங்கை மூட்டிகா தத்திறற் கொம்மெனக் கொன்று
னடுங்கவின் றிவை யுக ...

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 450-வது நம்பரில் வந்துள்ளதே; அது வசனநடையிலானது; இது செய்யுள்நடையினது; வடமொழியிலுள்ள கணேசபுராணம் என்பதன் மொழிபெயர்ப்பு. இதிலுள்ள நாட்டுப்படலம், நகரப்படலம், நைமிசப்படலம், பதிகம் ஆகிய இவை வடமொழியிலில்லாதன. இந்நூலாசிரியர் துறைசைக் கச்சியப்பமுனிவரென்பவர்; இவர் சிவஞானமுனிவரது மாணுக்கர். இவரியற்றிய வேறுநூல்கள்: திருத்தணிகைபுராணம், காஞ்சிப்புராணமிரண்டாங்காண்டம், திருவானைக்காபுராணம் முதலியன. இந்நூல் விநாயகபுராணமென்றும் வழங்கப்படும். இதுசிறந்த நடையினையுடையது. இந்தப் பிரதியில் உபாஸனகாண்டமும், லீலாகாண்டத்தின் முதல் நான்கு படலங்களும், ஐந்தாவது படலத்தின் சில பாடல்களுமே உள்ளன. இதில், 3, 194—196, 198, 202—204, 206—216 இவ்வெண்ணமைந்த ஏடுகளில்லை. 9-வது ஏடு வெற்றேடு.

R. No. 86.

Palm-leaf. $11\frac{7}{8} \times 1\frac{1}{8}$ inches. Foll. 61. Lines, 5-6 to a page. Tamil. Injured.

Purchased in 1911-12 from Cawder Beg of Triplicane.

மாரியம்மன் வர்ணிப்பு.

MĀRIYAMMAN VARṆIPPU.

This is a short poem of praise and prayer addressed to Māriyamman, a village goddess, worshipped chiefly by the non-Brahmin castes in Southern India.

Complete.

Beginning:

முந்திமுந்தி விநாயகனே முரு(கு)குழலாள்ச[ற](ர)ஸ்[ப]
[(வ)தியே.

கந்தருக்கு[மி](மு)ன்பிறந்த கணபதியே முன்னடவாய்

* * * * * * *

* * * * * * *

என்னுவில் ச[ற](ர)ஸ்[ப](வ)தியே நீயிருந்து காருமம்மா.

மாரியம்மன் வர்[ன்]ணிப்பு வையகத்தி[ல்]ஞன்படிக்க

ஒரு சிந்தனைகள் வா[ரு](ரா)மல் ச[ற](ர)ஸ்[ப](வ)தியே
[காருமம்மா.

* * * * * * *

* * * * * * *

ஆ[ரே](ரை)நினைப்பேனம்மா [யி](இ)ந்த அளவ[த்த](ற்
ற) சிந்தையிலே

எவரைநினைப்பேனம்மா என்னுடைய[பொ](பு)ந்தியிலே

அங்காளதேவியம்மாள் கங்காள [யீ](வீ)[ஸ்ப](சுவ)ரியே

எரியெ[ண்ணு](ன்று)ல் எரியம்மா[யி](இ)ருகரையும்பொ
[ன்னேரி.

End:

தண்டுமோரித்தாயே சங்கரியே[ஞ](நா)ன்ச[ற](ர)ணம்

பாளையத்துமாரியரே பத்தினியே[ஞ](நா)ன்ச[ற](ர)ணம்

* * * * * * *

* * * * * * *

மைந்த[றரன](ரனெ)வோரும் மிகவாழி
உம்மை(க்)கோடித்தமக்களெல்லாம்குலகோத்திரம்மிக
[வாழி
யிந்தமனெயிலே யெ[ண்ணு](ங்நா)ளும்நீயிருந்து
இக்கட்டுவா[ரு](ரா)மல் [யெ](எ)ங்களைநீகாருமம்மா.

Colophon:

மாரியம்மன் வ[றன்னி](ர்ணி)ப்பு நிை[ர](ற)ஞ்சுது முற்
[றிற்று.
தாது௵ மாசி௴ ௨௰௩௳ [யெ](எ)ழுதினது.

(கு-பு.) —

இந்நூல் மாரியம்மன் என்னும் தேவதையின் தோத்திர ரூபமாக அமைந்தது. கிராமங்கள்தோறுமுள்ள மாரியம்மன் கோவில்களில் பூசைசெய்யும் பூசாரிகளால் பாடப்படும் தன்மையது. மிகவும் தாழ்ந்தநடையது. இதில் பிழைகளும் மிகுந்துள்ளன. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

R. No. 87.

Palm-leaf. $10\frac{1}{2} \times 1\frac{1}{4}$ inches. Foll. 80. Lines, 4 to a page. Tamil. Slightly injured.

Purchased in 1911-12 from Cawder Beg of Triplicane.

வீரபோகவசந்தராயர் பத்திரிகை.

VĪRABŌGAVASANTARĀYAR PATTIRIKAI.

(Consists of ten letters by Vīrabhōga Vasanta Rāya, son of Jayasing of Kashmir,) and by Cidambara Dīkṣitar and Rāmayōgi Ayyar, considered to be incarnations of Viṣṇu, Siva and Brahma respectively. The letters contain prophetic warnings of the evils and calamities, that would befall the Indian people, and a description of the attempt made by these three persons to bring back the people from their wicked ways to the life of virtue and righteousness.

Complete.

Beginning :

வீரபோகவசந்தராயருடைய சுபபத்திரிகையென்றறி[க](ய)வும். 1861ஹு ஆக[ஷ்ட்](ஸ்)டு மீ 24 உ [திக்கி](குத்) தமிழ் துன்மதி ஹு ஆவணி மீ ௰உ ஸ்ரீ சிதம்பர தீக்ஷி[தா](தர்க)ளும் ராமயோகி அய்யரவர்களும் [யெ](எ)ழுதியனுப்[பிவை](புவி)த்த பத்திரிகை.

ஸ்ரீ சிதம்பரதீக்ஷி[தா](தர்க)ளும் ராமயோகிஅய்யரவர்களும் துன்மதி ஹு சித்திரை மீ தி[ள]ரயோதசி, வியாழக்கிழமையில் ஷ்டி பத்திரிகையில் [யேற்ப்](ஏற்)பாடுசெய்தது [யெ](எ)ன்னவெனில் ; தெய்வலோகத்தில் முன்னொரு [ளு](நா)ள் முப்பத்துமுக்கோடி தேவர்களும் * * * * * * அழைப்பித்துத் தேவேந்திரன் கட்டளையிட்டவி[ப](வ)ரமானது: ஓ தேவர்களே! பூலோகத்தில் பாவமானது மூன்றுபங்கும், புண்ணியமானது ஒருபங்குமாக நடக்கின்றது. துஷ்[ட்]டர்கள் மகாகெர்[வ]வத்தை அடைந்துபெரியோர்களையும் நல்லோர்களையும் தூஷிக்[கு](கி)றார்கள். * *

End :

மேலும் [யெ](எ)ங்களோடே உ[யி](யு)த்[திய](த)ஞ் செய்தவர்கள் [யெ](எ)வர்களுமில்லை. * * * * யாவர்வந்தபோதிலுஞ் சங்கரித்துப்போடுவோம். [யி](இ)ந்தப்பத்திரிகையை நிஜமென்று நம்பவேண்டும்.

(கு-பு.)—

இது, வீரபோகவசந்தராயரென்பவரது பெருமைமுதலியவற்றைக் கூறுவது. விஷ்ணு, காச்மீரதேசத்து ஜயசிங்குமகாராஜாவுக்கு வீரபோகவசந்தராயரென்னும் புத்திரராகவும், சிவன் சிதம்பர தீக்ஷிதர்களாகவும், பிரமன் ராமயோகி அய்யர் என்னும் பிராமணராகவும் பிறந்து, பூலோகத்தில் கலியின் மகிமையால் அதர்மம் மேலிட்டுத்துஷ்டர்களாகிய ஜனங்களில் சிலரை இவர்கள் கொன்றும், தங்கள் பத்திரிகைகளால் சிலரை நடுங்குவித்தும், சிலரைத் தங்களைப்போன்ற தேவதைகளால் கொல்வித்தும் பூமியில் தர்மத்தை நிலைநிறுத்தினார்களென்று கூறுவது. இந்தப் பிரதியில் பத்துப்பத்திரிகைகள் உள்ளன. இவ்வளவில் நூல் முடிந்ததென்றே தோற்றுகிறது.

R. No. 88.

Palm-leaf. 19½ × 2 inches. Foll. 80. Lines, 7 to a page. Tamil and Grantha. Injured.

Presented by Śrīraṅganārāyaṇa Jīyar of Srirangam in 1911-12.

(*a*) அபயப்ரதான ஸாரம்.

ABHAYAPRADĀNASARAM.

Foll. 1*a*—70*a*.

This is a Tamil commentary on those stanzas in the Rāmāyaṇa which deal with the refuge taken by Vibhīṣaṇa with Rāma (Yuddhakāṇḍa.). By Periyavāccānpiḷḷai, also called Kṛṣṇa, son of Yāmuna.

Complete.

Beginning:

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே |
யத்கடாக்ஷ[க்ஷை]ணலக்ஷ்யாணாம் ஸுலபஶ்ஸ்ரீதரஸ்ஸதா ||
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

“தௌ து(மேதாவிநௌ த்ருஷ்ட்வா வேதே)ஷு பரிநிஷ்டிதௌ, வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு:” என்று வேதோபப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான ப்ரபந்தமாகையாலே ஜகத்கார(ண) (ஸத்தவாச)வஸ்துப்ரதிபாதகமான ஸத்ஸம் ஸோம்ய ... இத்யாதி வாக்யங்களையும், ஸந்த்வஸ்துவினுடைய ஸ்வதாரோபவாதகமான ஸ்வஜாயமாநோ பஹுதா விஜாயதே இத்யாதிவாக்யங்களையும், ஸ்வதந்த்ரவ்யாஜமான ஸர்வபரித்ராணதக்ஷ்யபிராய(ந)ங்களைச் சொல்லுகிற யோ வேதவேத்யதூஷகவதி, யோ வேதாநாம் [illegible] ஹித: என்னும் வசநங்களை(யும்) உபப்ரும்ஹிக்கிறது ஸ்ரீராமாயணம்.

* * * * * * * * * *

இப்படி வேதோபப்ரும்ஹணமான ஸ்ரீராமாயணத்துக்கு ப்ரதாநப்ரமேயமான “ந்யாஸ இத்யாஹுர் மநீஷிணோ ப்ரஹ்மாணம், தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:” என்று தர்

மங்களில் பரதர்மமாகச் சொல்லப்பட்ட ஶரணாகதிதர்மத்தை விபீஷணவ்ருத்தாந்தத்தாலே உபப்ருஹ்மிக்கிறான், ஸ்ரீவால்மீகி பகவான். * * * *
* * * * * *

ஸுநிவிஷ்டம் ஹிதம் வாக்யமுக்தவந்தம் விபீஷணம் |
அப்ரவீத் பருஷம் வாக்யம் ராவண: காலசோதித: ||

(அ-கை. முதல் ஶ்லோகத்தால் ஆண்பிள்ளை யா[னு](ன)சக்கரவர்த்தித் திருமகனோடே வைரம்பிறந்து நின்[று] (ற) தசையிலே இத்தை நிஸ்தரிக்கலாம்படி ப்ராதாவானவன் பரஹிதத்தை உபதேசிக்க, இத்தைக் காற்கடைக்கொண்டு நாசகரான காலனுடை[ை]ய வார்த்தையைக்கேட்டு அவன்பின் போவதே! என்று ருஷி வெறுக்கிறான்.

வ்யா-ம். (ஸுநிவிஷ்டம்.) அர்த்தத்தளவுஞ் செ[ா]ல்ல வேண்டாதே ஸம்ஶய விபர்யயமாம்படி அழகிய ஸந்நிவேசத்தை உடைத்தாயிருக்கும் அவன் வார்த்தையை, அதாகிறது அஹிதமானாலும் விடவொண்ணாதிருக்கை. அன்றிக்கே(ஸுநிவிஷ்டமுக்தவந்தம்) என்று க்ரியாவிசேஷ[த்தானு] (ண)மாகவுமாம்; வார்த்தை அழகிதானாலும் நெ[ன](ந)ஞ்சிற்படாவிடில் காற்கடைக் கொள்ளலாமிறே; அங்ஙனன்றிக்கே நெஞ்சிலே அழகிதாக நிவிஷ்டமாம்படி சொன்னனென்கை.

End:

(யதாவராணம்.) என்று "ராவணாயைவ ராகஶ்ரா நவ்ராணை கஶாரஶதெ ஜயாய" என்கிற முதலிகளுடைய நிலையிலே நின்று பேசுகிறார்.

பட்டர்ஸ்ரீபாதத்திலே அபயப்ரதானங் கேட்டாரொரு ஸ்ரீவைஷ்ணவர், இப்ரகர்ணத்தில் செய்ததாய்த்து என்னென்றுகேட்க, ஸம்ஶயாஷராயிருப்பார் ஶரணாகதராகாரென்று ஸௌராஜர் பக்ஷத்தாலே பூர்வபக்ஷித்து, தோஷகுணங்கள் அப்ரயோஜகங்கள்; சேதநர் நின்றநிலையிலே சரணாகதிக்கு அர்ஹரென்று பெருமாள் திருவுள்ளத்தாலே ஸித்தம்.] (ந்தம்).
ஸ்ரீக்ருஷ்ண * * * ஸஹா. பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

பதகம்-கொடுமை. * * * * வன்னியம் ஆனைக்குப்பு, சொக்கொட்டான்.

(கு-பு.)—

இது, ஸ்ரீராமன் விபீஷணனுக்கு அடைக்கலம் தந்தது பற்றிக் கூறும் வால்மீகிராமாயண ஸ்லோகங்களுக்குப் பெரிய வாச்சான்பிள்ளை இயற்றிய விரிவுரை. மணிப்ரவாளநடையி லமைந்தது. சிறந்தநடையது. இந்தப் பிரதியில் இவ்வுரை முற்று மிருக்கிறது.

(*b*) க்ஷமாஷோடஶீவ்யாக்யாநம்.

KṢAMĀṢŌḌAŚĪVYĀKHYĀNAM.

Foll. 71*a*—80*b*.

See the Sanskrit part of this Triennial Catalogue.

R. No. 89.

Palm-leaf. $17\frac{1}{8} \times 1\frac{1}{2}$ inches. Foll. 208. Lines, 7 to a page. Tamil and Grantha. Much injured.

Presented by Śrīranganārāyaṇa Jīyar of Srirangam in 1911-12.

இராமாநுஜ திவ்யஸூரிசரிதை.

RĀMĀNUJADIVYASŪRICARITAI.

Same work as the one described under R. No. 15 *ante*.

Incomplete.

(கு-பு.)—

இது, மூவருடத்திய காட்லாக்கின் 15-வது நம்பர் பிரதி போன்றது. இதன் ஏடுகள் மிகவுஞ் செல்லரிப்புண்டுள்ளன. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுப்பெறவில்லை.

R. No. 90.

Palm-leaf. $16\frac{5}{8} \times 1\frac{1}{2}$ inches. Foll. 125. Lines, 7 to a page. Tamil and Grantha. Slightly injured.

Presented by Śrīranganārāyaṇa Jīyar of Srirangam in 1911-12.

வார்த்தாமாலை.

VĀRTTĀMĀLAI.

Same work as the one described under R. No. 46 *ante*.

As the leaves are not numbered, they have not been arranged in proper order. On the first leaf there is a statement that this MS. contains the portion beginning with the 129th Vārttai and goes on to the end.

(கு-பு.)—

இது, மூவருடத்திய காட்லாக்கின் 46-வது நம்பர் பிரதி போன்றது. இந்நூல் 129-வது வார்த்தைதொடங்கி இறுதி வரையில் உள்ளதாக இதன் முதலேட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது. இதன் ஏடுகளில் எண்ணமைக்கப் படாமையால் மாற்றிக்கோக்கப்பட்டுள்ள ஏடுகளை முறைப்படுத்திக் கோக்கமுடியவில்லை. பெரும்பாலும் ஏடுகள் மாற்றியே கோக்கப்பட்டுள்ளன.

R. No. 91.

Palm-leaf. 14¼ × 1¼ inches. Foll. 19. Lines, 6 to a page. Tamil and Grantha. Injured.

Presented by Śrīraṅganārāyaṇa Jīyar of Srirangam in 1911 –12.

(*a*) **அஷ்டாக்ஷரமகிமை.**

ASṬĀKṢARAMAHIMAI.

Foll. 1*a*—5*a*.

This work consists of the commentary by Periyavāccān-piḷḷai on the stanza beginning with Yatrāṣṭākṣara; and treats of the greatness of the eight-syllabled Mantra addressed to Nārāyaṇa and also of those who follow the teachings contained therein. It is stated that the country inhabited by such persons will be free from disease, drought, and theft.

Complete.

Beginning:

பெரியவாச்சா[ம்](ன்)பிள்ளை திருவடிகளே சரணம்.

𑌯𑌤𑍍𑌰𑌾𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑍋 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑍋 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇 |
𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌞𑍍𑌚𑌰𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌦𑍁𑌰𑍍𑌭𑌿𑌕𑍍𑌷𑌤𑌸𑍍𑌕𑌰𑌾𑌃 ||

எம்பெருமான் உகந்தருளின திருப்பதிகளிலே வர்த்தித்தானாகில் ஸர்வேஶ்வரன்செய்த ஸாஹ்யம். [யி](இ)வன் ஒரு குறுச்சிப்பு[ற](ர)ங்களிலே வர்த்தித்தானாகில் ஸம்ஸாரிகள்செய்த பாக்யம். ஜ்ஞாநாதிகர்வ[ஸி](ர்த்தி)க்கிற தேசங்களிலே வர்த்தித்

தாஞகில் அவர்களுக்கு உசாத்துணையாய்த் தலை(க்)கட்டும். * * * அஷ்டாக்ஷரஸம்ஹிதம்-இ(வ்) வஷ்டாக்ஷரத்திலே ஸந்நிஹிதனானவன். [ஞ] (நா)ராயணபுருஷோத்தம பரப்ரம்மாதிசப்தங்கள் தத்ப்ரதிபாத்யனான ஸர்வேசுவரனுக்கே அஸாதாரணமானாப்போலே அஷ்டாக்ஷர(ம)ன்றால் [யி] (இ)ம்மந்திரத்துக்கே அஸாதாரணமாயிருப்பது.

End :

வ்யாதிதுர்பிக்ஷதஸ்கரா: என்கிற விடத்துக்கு, கொன்றுயிருண்ணும் விசா[தப்] தி)பகை பசிதீய[ய]னவெல்லாம் கடிவானென்கிறவிடமும் சொல்லப்படுகிறது. ஆக இஶ்லோகத்தாலே திருமந்திரவைபவமும், தந்நிஷ்டனான வைஷ்ணவன் வைபவமும், அவனை ஆதரிக்குமவர்கள் வர்த்திக்கும் தேசவைபவமும் சொல்லுகிறது.

ஆச்சா[ம்](ண்) பிள்ளை திருவடிகளே சரணம். அப்பன் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இது, "யத்ராஷ்டாக்ஷர" என்னும் சுலோகத்தின் பொருளைப் பலமேற்கோள்களுடன் விளக்குவது. எல்லா மந்திரங்களுள்ளும் திருவஷ்டாக்ஷரமே மிகவும் சிறந்ததென்றும், அதை அர்த்தத்துடன் அநுஸந்தித்துச் சித்திபெற்றவன் வஸிக்கும் இடத்தில் நோய்முதலியவை அணுகாவென்றும், அவனைப் பூஜிப்பவர் நற்கதியடைவரென்றும் கூறுவது. இவ்வுரையாசிரியர் பெரியவாச்சான்பிள்ளை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

(*b*) ரஹஸ்யரத்நம்.

RAHASYARATNAM.

Foll. 5*a*—6*b*.

This work gives briefly those essential teachings contained in the three Rahasyas, *viz.*, Aṣṭākṣara, Dvaya and Caramaślōka, which are for the guidance of persons seeking salvation.

Complete.

Beginning:

ரஹஸ்யார்த்தம்.

ஸ்ரிய:பதியான ஸர்வேசுவரனைப்பற்ற இஜ்ஜீவாத்மாக்களுக்கு ஜ்ஞாதவ்யார்த்தவிசேஷங்கள் ஸ்வரூபமென்றிருக்கை ஸதாசார்யகடாக்ஷத்தாலே ஸகலவேதஸங்க்ரஹமான ஸ்ரீமதஷ்டாக்ஷரமஹாமந்த்ரத்தில் ப்ரதிபாத்யவிசேஷங்களாலே தெளியவறிந்து,

End:

ஸிம்ஹாஸநாஸக்தனை ஸ்ரிய:பதியைப்பார்த்து நிஸ்ஸாரனுமாய், நிஸ்ஸம்ஶயனுமாய், காலம்போகா[னி](நி)ன்[று](ற)து; கர்மங்கழியாநின்றது; பாபேர்ப்பூர்த்தி குறுகா[னி](நி)ன்[று](ற)து என்று மேல்[ப்]பி(ற)ப்புக்குறுகிறயே(?)ற்றைப்பார்த்து ஹ்ருஷ்டனாவாய், ப்ரதிஸம்பகத்தோடே யிருந்த[னு] (நா)ள் ஸ்வ(வ)திஷயத்திலும், ஸாம்வகவிஷயத்திலும் ஸ்வயம்ப்ரயோஜனமான கைங்கர்யங்களையும் பண்ணியிருக்குமவன் ஏகாந்தப்ராயன்.

அப்பன் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இந்நூல் வைஷ்ணவ ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தது. மோக்ஷம்அடைய விரும்புவோர் திருமந்த்ரம், த்வயம், சரமஶ்லோகம் ஆகிய இம்மூன்றில் அறியவேண்டிய ஸாரமான விஷயங்கள் இன்னவை என்று கூறுவது. மணிப்ரவாள நடையிலமைந்தது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. இயற்றியவர் இன்னாரெனத்தெரியவில்லை.

(c) பட்டர் பத்தர்த்தம்.

BHAṬṬAR PAṬṬARTHAM.

Foll. 6b—8a.

Gives the ten chief tenets relating to the attainment of salvation, as taught by Parāśarabhaṭṭar to his disciple Nañjīyar.

Complete.

Beginning:

நஞ்சீயருக்குப் பட்டரருளிச்செய்த பத்தர்த்தம்.

சரக்கே[த்தி](ற்றி)ன மரக்கலத்துக்குக் கெடுகாற்றாலேயாதல், தோஷங்களினுடைய பாஹுள்யத்தாலேயாதல்,

ஸம்ஸார ஸாகரத்திலேயாதல் பெருங்கடல்[ப்]பாய்ந்து ப்ரதீகாரமில்லாத வழிவருமாப்போலே எம்பெருமான் தன் திருவடிகளில் [ப்]பண்ணிவைத்த ப்ரபத்திக்கும் * * * * தத்வஸம்ஹாரநிர்ப்ரத்யூஹமாகவே யிப் பத்துவார்த்தையுங்கேட்டு ஸாக்ஷிபண்ணி நிர்ப்பரனாய் மார்பிலே கைவைத்து உறங்குவது. அவையெவையென்னில்:—ஆசார்யன் திருவுள்ளத்தாலே ஈச்வரன[ன்னி](ம்நி)னைக்கும்படி ஶரீராவஸாநே ப்ராணங்களை யழியமாறியும் ஒரு கைங்கர்யம் உறுதியாகச்செய்வது. (க)

End:

ஸர்வவிஷயபூதரான எம்பெருமானை[னி](நி)ரந்தரம் நினைப்பதாக நினைக்கவேண்டுமென்று அபேக்ஷித்துப் போரவும். [யி](இ)ப்பத்தர்த்தமும் ப்ரபத்திஸூக்ஷ்மம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

[யி](இ)ப்பால் திருக்குருகைரத்நம்.

(கு-பு.)—

இது, பட்டர் நஞ்சீயரென்பவருக்கு உபதேசித்த பத்து விஷயங்களடங்கியதொரு நூல். இதில் மோக்ஷமடையும் மார்க்கம் தெளிவாய் விளங்கும். இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(*d*) திருக்குருகைரத்நம்.

TIRUKKURUKAIRATNAM.

Foll. 8*b*—10*b*.

This work explains the meaning of the Rahasya, called Dvaya, as taught by Sēnai-Mudaliyār to Nammā̠lvār, by the latter to Madurakaviyā̠lvār and by Āḷavandār to Tirukkōṭṭiyūr nambi.

Complete.

Beginning:

திருக்குருகைரத்நம்.

திருநாமதாரி முத்ர(ா)தாரி மந்த்ரஸம்பந்தி என்கிறவன் ப்ரக்ருதிஸம்பந்தமொழிய ஸ்வரூபஸம்பந்தம் அறியான். ஆகையாலே ரூபநாமங்களால் போராது. ஸத்த்வஸ்வபாவ

யஸம்பந்தமும், ஜீவாத்மபரமாத்மஸம்பந்தமும், திருமந்த்ரத்தாலே தன்னை உள்ளபடி உணரவேணும். சரமஶ்லோகத்தாலே எம்பெருமான்தானே உபாயமென்று தெளியவேணும்.

End:

அக்கரையாவது விரஜைக்கு அக்கரை, அப்போதன்றோ நித்யனாய் நித்யாநுபவம்பண்ணும். [ணி](நி)த்யரோடே ஒருகோ[ர்]வையாம். [யி](இ)து ஸே[நமொ] (னைமு)தலியார் நம்மாழ்வாருக்கு அருளிச்செய்த[து](வ)யத்தினுடைய அர்த்தாநுஸந்தாநம். நம்மாழ்வார் ஸ்ரீமதுரகவியாழ்வாருக்கு அருளிச்செய்த த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தாநம். ஆளவந்தார் திருக்கோட்டியூர் நம்பிக்கு அருளிச்செய்த த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தாநம்.

அப்பன் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இதுவும் வைஷ்ணவஸம்பிரதாயத்தைச்சேர்ந்தது. இதில் த்வயத்தின்பொருள் இன்னதெனக் கூறப்பட்டுள்ளது. முதலில் சேனைமுதலியார் நம்மாழ்வாருக்கும், நம்மாழ்வார் மதுரகவிகளுக்கும், ஆளவந்தார் திருக்கோட்டியூர் நம்பிக்கும், இவ்வர்த்தத்தை உபதேசித்ததாக இதன் இறுதிவாக்கியங்களால் தெரிகின்றது. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

(e) நவரத்தினமாலை.

NAVARATTINAMĀLAI.

Foll. 10*b*—12*b*.

This is one of the 18 Rahasyas of Piḷḷailōkācāryar, and explains what a Prapanna should think of himself, his body, his relatives, his fellow beings, the deities other than Viṣṇu, the devotees of Viṣṇu, the religious teacher, Lakṣmi, and Lord Nārāyaṇa.

Complete.

Beginning:

நவரத்நமாலை.

ப்ரபந்நனானவன் தன்னையும், தனக்கு விரோதியான (தேகத்தையும்), தேகத்தைப்ப[த்தி] (ற்றி)வரும் பந்துக்களையும், ஸம்ஸாரிகளையும், தேவதாந்தரங்களையும், ஸ்ரீவைஷ்ண

வர்களையும், ஆசார்யனையும், பிராட்டியையும், [யீ] (ஈ)சுவரனை யும், நினைத்திருக்கும்படி யெங்[க] (ங)னே யென்னில்:—உடம் பில் வேறுபட்டு [னி] (நி)த்யனாய் ஒருபடிப்பட்டு அ[னு](ணு) வாய் ஜ்ஞாநத்தையும் ஆநந்தத்தையும் வடிவாகவுடையனாய், ஜ்ஞாநத்துக்கும் ஆநந்தத்துக்கும் இருப்பிடமாய் எம்பெரு மானையொழிய வேறொன்றை * * * *

End :

ஸ்ருஷ்டிகாலத்திலே சரீரத்தையும், இந்திரியங்களையுந் தந்து, * * * ஸஹாவாயல் ஞேடே சேர்த்து, நம்முடைய ஸர்வாபராதங்களையும் பொறுத்து, ஸம்ஸார பந் தத்தையும் கழித்து, அர்ச்சிராதி மார்க்கத்தையும் பரமபதத் தையும், குணாநுபவத்தையுந்தந்து, யாவதாத்மபாவி நித்யகைங் கர்யங்கொள்ளும் ஸ்வாமியென்று ஸர்வேசுவரனை நினைப் பான். ஸமுத்ரத்தினுடைய ஆஹாரமெல்லாம் ஜலமயமாயிருக்கு மாப்போலே ஸ்ரீமந்நாராயணனுடைய வடிவித்தனையும் ஸ்ரீமய மாயிருக்குமென்று பெரியமுதலியாரருளிச்செய்வர். *

* * * * * *

ராஜகுமாரனுக்கு கவலீநிகரம்போலே வரவணனுக்கு வர வத்தியைவிடில் நாக்கு வற்றுமென்று நம்பிள்ளை அருளிச்செய் வர். வாழியுலகாசிரியன்.

(கு-பு.)—

இந்நூல் பிள்ளைலோகாசாரியர் இயற்றிய 18 ரஹஸ்யங் களில் ஒன்று. பகவானைச் சரணம்புக்கவன், தன்னையும், தனது சரீரத்தையும், அதுபற்றிவரும் பந்துக்களையும், ஸம்ஸாரிகளை யும், இதரதெய்வங்களையும், ஸ்ரீவைஷ்ணவர்களையும், தனது ஆசிரியனையும், பிராட்டியையும், ஈசுவரனையும், இன்னின்ன தன்மையுடையரென்று நினைத்திருந்து முத்தியடைவன் என்பது இதில் கூறப்பட்டுள்ளது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(f) ஸகலப்ரமாணதாத்பர்யம்.

SAKĀLAPRAMĀṆATĀTPARYAM.

Foll. 13a—19b.

This work, purporting to give the essential teaching of all the Hindu authoritative religious texts, explains the nature of

Brahman according to the doctrines of Śri-Vaiṣṇavism. The author of the work seems to be Periyavāccānpiḷḷai.

Complete.

Beginning:

ஸ்ரீய:பதியாய் விஷ்ணுவாஸுதேவநாராயணஶப்தவாச்யமான ப்ரஹ்மமொன்றுமே முமுக்ஷுவுக்கு ஜ்ஞாதவ்யமென்று ஸகலவேதார்ணதாத்பர்யம். அந்த ப்ரஹ்மந்தான் விஶேஷணமென்றும், விஶேஷ்யமென்றும் த்விவிதமாயிருக்கும். விஶேஷணமாகிறது, விஶேஷ்யத்தோடே பி[றி] (ரி)ந்திராத தர்மம். விஶேஷ்யமாகிறது, ஸவிஶேஷணத்தோடே பிரிந்திராத தர்மி. விஶேஷணமும் போகோபகரணமென்றும், லீலோபகரணமென்றும் த்விவிதம்.

End:

இப்படி ஸமஸ்த விஶேஷணவிஶிஷ்டமான ப்ரஹ்மம் ஒன்றையும் அறிந்த அதிகாரி வேறொன்றை அறியவேண்டாத க்ருதக்ருத்யன். இந்தவதிகா(ரி)யோ ஜ்ஞாநாதிகரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும், நித்யர்க்கும், முக்தர்க்கும், ஸ்ரீய:பதிக்கும் அத்யந்தப்ரியதமன். ஆச்சான்பிள்ளை திருவடிகளே சரணம். ஜீயர் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இந்நூலும் வைஷ்ணவஸம்பிரதாயத்தைச் சேர்ந்தது. இதில் ஸகலப்ரமாணங்களினுடைய தாற்பரியம் இன்னதென்னத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் பெரியவாச்சான்பிள்ளை என்று தோன்றுகிறது. இந்நூல் இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 92.

Palm-leaf. $16\frac{1}{2} \times 1\frac{5}{8}$ inches. Foll. 24. Lines, 7 to a page. Tamil and Grantha. Injured.

Presented by Śrīraṅganārāyaṇa Jīyar of Srirangam in 1911-12.

ஆஹாரநியமம், உரையுடன்.

ĀHĀRANIYAMAM WITH COMMENTARY.

This MS. contains the 21 Tamil stanzas of Vēdāntadēśikar, mentioning the kinds of food to be taken and those to be avoided

by a man desirous of obtaining salvation. These two classes of food are said to have been noted by Rāmānujācarya in his Gītābhāṣya. There is also a commentary in Tamil by Śrībhāṣyam Śrīnivāsā cāriyar. A Sanskrit stanza in the end of the work, however, attributes the authorship to his son.

Complete.

Beginning:

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: * * * கேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ * * * ஸதா ஹ்ருதி ॥

ஸ்ரீவேதாந்தகுரூணாம் ஸ்ரீமதாஹாரநிர்ணயே ।
(ஸாரா)நாம் விவ்ருதிம் வக்ஷ்யே த்ரு[ஷ்டா](வா)ஸம்பந்நாத்மநாம் ॥

ஸ்ரீபாஷ்யகாரர் கீதாபாஷ்யத்திலே ஶாஸ்த்ரப்ரமாணமூலகமாக வர்ஜ்யாவர்ஜ்யங்களை நிரூபித்தார். அவைதன்னையே வேதாந்தாசார்யர் ஸர்வயோக்யமான த்ராவிடபாஷாரூபமான [யி] (இ)ருபதுபாட்டாலே வர்ஜ்யாவர்ஜ்யங்களை ஶாஸ்த்ரஸித்தங்களென்று ஶ்ருதிஸ்ம்ருதிஸதாசாரா: என்கிற த்ரிவிதப்ரமாணத்தை ஆஹாரவிஷயத்திலுங் காட்டு[கு](கி)றார்.

ஆகாரத் திருவகையா னன்றுந் தீது
 மறுமறைகொண் டெதிராச ரிவைமொ ழிந்தார்
ஆகாத வழிவிலக்கி யாக்குங் கண்ண
 னனைத்துலகும் வாழவிது சா[த்தி](ற்றி) வைத்தான்
போகாது போக்குவிக்கு முனிவர் சொன்ன
 பொய்யாத மொழிகளையும் பொருந்தக் கேண்மின்
ஆகாதென் றிவைதவிர்ந்தா மதுவே கொண்ட
 வசகரனு மாகங்காத் தருள்பெற் றானே. (க)

ஆகாரத்திருவகையால் - போஜனவிஷயத்தில் இரண்டு ப்ரகார முண்டாகையாலே, நன்றுந்தீதும்-இவை நல்லதும் பொல்லாதுமான இவ்விரண்டு[யிந்த] ப்ரகாரத்தை * *
* * * * * *

அசகரனு மாகங்காத்தருள் பெ [த்தா](ற்ற)னே - அஜகரனென்[கு] (கி)ற ப்ராம்மணன் சரீரத்தை ஸாத்விகாஹாராதிகளாலே ரக்ஷித்து, பகவ(த்)ஸ்மரணத்தாலே பகவத்விஷயக்ருபா ஸாதகனானான்.

End :

பங்கயமாது [த்த] (ற்ற)வருளாளர்தம் பால்ப[ற்றி](த்தி) மிகு-பங்கஜவாஸியான [பெ] (பி)ராட்டிக்[கி] (கு)வல்லபனான பேரருளாளர் விஷயத்திலே பக்தியோடேகூட, யதா * * பவித்திரங்கள் பயில்மின்னீரே ஸாத்விகாஹாரங்களைப் பரிசயம் பண்ணுங்கோள். . . . . (உக)

ஸ்ரீபாஷ்ய ஸ்ரீநிவாஸார்யஸூநுநா தேந ஸாரஸாரஸமுத்த்ருத: |
ஆஹாரநியமவ்யாக்யாநம் ஸதாம் [வ்ரதேத்யைவ] (ப்ரீத்யைவ) நிர்மிதம் ||

சீரார் தூப்புற்றிருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

வஸ்துத்ரயம் ஸ்ருதாஹ்யம். ஸம்ப்ரதாயபஸ்ய ஸமாஸ்வாதவத் விசக்ஷ்ண:.

* * * * * *

ஹேயம் ஹேயம் ஹிதம் (ா) ந்த் தோயதேவா ஸாம் ஸநு ஸ்ரீ ஸ்தாயங்கம்
வாஸக்ஷாஜநஸேஷதோயஷேவி யத்ந் காவஸேஷம் வஸெஸ: |
தோயம் வஸ்து காயரோநவஸ்ரீவீஸிஜ்ஞு விஜ்ஞாந்நவம்
கிஞ்சாஸ்வாத்ருஷ்டிஹீநம் ஜநஸ்திதம் ஸம்ஸாரமம் ஸாநவ: ||

ஸ்ரீவேதாந்தமஹாதேசிகாய நம:.

(கு-பு.)—

இந்நூல் தேசிகப்பிரபந்தத்தைச் சார்ந்தது. ஸத்வகுணம் மிகுந்து நல்ல ஞானம்பெற்று முத்தியடையவிரும்புவோர், ஆகாரங்களில் இன்னின்னவற்றைக் கொள்ளவேண்டுமென்றும், இன்னின்னவற்றை நீக்கவேண்டுமென்றும் கூறுவது. பாயிரத்துடன் 21 பாடல்களையுடையது. இதன் இவ்விரிவுரை ஸ்ரீபாஷியம் ஸ்ரீநிவாஸாசார்யரால் இயற்றப்பட்டதென அச்சுப்பிரதியில் குறிக்கப்பட்டிருக்கிறது. இதன் இறுதிஸ்லோகத்தால் அவரது புத்திரரியற்றியதெனத் தெரிகின்றது. உரை முடிந்தபின்னர், இந்நூலின் அரும்பதங்கட்குப் பொருளும், பொருத்தமான சில வடமொழி சுலோகங்களும் மூன்றேடுகளில் எழுதப்பட்டுள்ளன.

R. No. 93.

Palm-leaf. $12\frac{5}{8} \times 1\frac{1}{4}$ inches. Foll. 43. Lines, 6 to a page. Tamil and Grantha. Injured.

Presented by Śrīranganārāyaṇa Jīyar of Srirangam in 1911-12.

(*a*) ஆத்மவிவாஹம்.

ĀTMAVIVĀHAM.

Foll. 1*a*—5*a*.

This work describes in metaphorical language the relationship of the soul to God which is represented to be that of the wife to the husband. The composition is said to be by Nāycciyār.

Complete.

Beginning:

ஆத்மா[வி](வெ)ன்கிற பெண்பிள்ளையும், ஈச்வரனாகிற பிதாவும், திருமந்த்ரமாகிற மாதாவும், த்வயமாகிற திருமங்கலியத்தை சரமஸ்லோகமாகிற [றெ](இர)ட்டைச் ச[ற](ர)ட்டிலே கோத்து, * * * * * *
பெண்ணே! [ஒ](உ)ங்களூரெது, பேரெது, சொல்லாய்! *
* * காஞ்சீநகரம் எங்களூர்; நாடெது? திருவழுதி வளநாடு; ஊரெது? திருக்குருகூர்; பேரெது? திருப்பேர்; குடியெது? திருக்குறுங்குடி;

End:

படுத்துக்கொள்ளும்போது அநுஸந்தானமென்ன? த்வயநிஷ்ட[ருயி](ராய்), தத்வநிஷ்ட[ருயி](ராய்) ஜீயர்கள் ஸ்ரீவைஷ்ண[வ] ாளாலே (ர்களை) ஸேவித்துக்கொண்டிருப்போ [மி] (மெ)ன்று [ஞ](நாய்) ச்சியா[ற] (ர)ருளிச்செய்தார்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இந்நூல், ஆத்மாவை மணமகளாகவும் திருமாலை மணமகனாகவும் உருவகப்படுத்திக்கூறுவது. மணிப்ரவாளநடையிலமைந்தது. இது நாய்ச்சியாரால் கூறப்பட்டதாக இந்நூலின் இறுதிவாக்கியம் புலப்படுத்துகிறது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(*b*) ஸாரார்த்த ரத்நாவளீ.

SĀRĀRTHARATNĀVAḶĪ.

Foll. 6*a*—43*a*.

This work expounds the importance of Jnānam (knowledge of the fundamental realities of the universe) and Bhakti (devo-

tion) in attaining salvation. The author of the work seemes to be Sundaradēśīkar, son of Varadāryar.

Incomplete.

Beginning :

ஸாரார்த்தாவளீ.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

வரதார்யஸுதோ தீமாந் ஸந்தர்ப்பம் தத்வார்த்தஸ்ய தாரகம் |
ஜ்ஞாநஸங்க்ரஹஜிஜ்ஞாஸூந் வக்தி ஸுந்தரதேசிக: ||

ஸ்ருதிஸ்ம்ருதிவாக்யப்ரமாணங்கள் உள்ளபடியே லபித்திருக்கிற ஸாராஸாரவிதர்களுக்கு அறியவேண்டும் ரஹஸ்யமேதென்னில் :—

'பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் சாச்வதம் சிவமச்யுதம்'
என்றும்,
'ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர' என்றும்,
* * * * *
ஸம்ஸாரமாகிற மஹாகோரஸாகரத்திலே மக்நரான சேதநரைப் பார்த்து ஸஜாதீயரான நாதயாமுநபெரியநம்பியதிராஜ கூரநாதஜீயர்முதலானவர்கள் திவ்யாவதாரமாகிற ஜங்கம ஸ்ரீவிமாநத்தைத் தரித்து, கேவலம் மோக்ஷத்துக்கு ஹேதுவாய், பரமப்ராப்யமாயிருக்கிற எம்பெருமானுரைக் காட்டிக் [கு](கொ)டுத்த ஸித்தோபாயஸ்வீகாரநிஷ்டரிடங்களிலே

End :

'ப்ரபந்நேஷு ஸ்ரீவத்ஸசிஹ்நம் ஜகாயம் நதீ ஹாதி ஸாஹ . . . விஷ்ணு ஸம்பந்த ஸங்க்ஷாராஜ்ஞாதி ஹேதும் ந காரயேத்' என்றும் பஹுப்ரமாணங்களுண்டாகையாலே வேதக. . . . . .

(கு-பு.)—

இந்நூல் வைஷ்ணவ ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தது. ஜ்ஞாநம் பக்தி முதலியவற்றின் ஸாரமான பயன் இன்னதென எடுத்துக்காட்டுவது. மணிப்ரவாள நடையினது. இதில் வடமொழிசுலோகங்களிற்பல மேற்கோள்களாக இடையிடையே எடுத்தாளப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் வரதாசார்யரென்பவருடைய குமாரர் சுந்தராசார்யரெனத் தோற்றுகிறது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமில்லை.

R. No. 94.

Palm-leaf. 14¾ × 1½ inches. Foll. 86. Lines 7-8 to a page. Tamil and Grantha. Slightly injured.

Presented by Śrīraṅganārāyaṇa Jīyar of Srirangam in 1911-12.

(*a*) ரஹஸ்யத்ரயவிவரணகாரிகா.

RAHASYATRAYAVIVARAṆAKĀRIKĀ.

Foll. 1*a*—2*a*.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(*b*) ரஹஸ்யத்ரயசூடாமணி.

RAHASYATRAYACŪḌĀMĀṆI.

Foll. 2*b*—3*a*.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(*c*) தனிப்ரணவம்.

TANIPRAṆAVAM.

Foll. 4*a*—14*b*.

This is one of the 18 Rahasya works of Piḷḷailōkācāryar, and treats of the meaning of Praṇava which is conceived to contain in itself the meaning of the eight-syllabled Mantra addressed to Nārāyaṇa.

Complete.

Beginning:

ஸகலவேத தாத்பர்யமாய், ஸகலசாஸ்த்ர ஸங்க்ரகமாய், ஸகலபலப்ரதமாய், ஸகலமந்திரங்களிலும் அதிகமான திருவஷ்டாக்ஷரமான திருமந்திரத்துக்கு, நம்பூர்வாசார்யர்கள் ஸ்வரூபம்சொல்லுகிறதென்றும், ப்ராப்யம்சொல்லுகிறதென்றும் இரண்டுபடி வாக்யார்த்தம்என்றருளிச் செய்வார்கள் ; இம்மந்திரந்தான் ஓம் என்றும், நமஃ என்றும், நாராயண(ாய) என்றும் மூன்று பதமாயிருக்கும்.

End:

ஆக வஸ்துத்ரயாத்மகமான ப்ரணவத்தால் அகாரவாச்யனான பரமாத்மாவுக்கு மகாரவாச்யமான ஜீவாத்மாவும்

அநந்யார்ஹஶேஷம் என்றதாய்த்து. இனிமந்த்ரசேஷமும் இப்பதத்திலே விவரணம்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இந்நூல் பிள்ளைலோகாசார்யர் இயற்றிய பதினெட்டு ரஹஸ்யங்களுள் ஒன்று. இதில் பிரணவமாகிய திருமந்திரத்தின் பொருள் இன்னதென விவரமாகக் கூறப்பட்டுள்ளது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(*d*) தனித்வயம்.

TANIDVAYAM.

Foll. 15*a*—24*b*.

This is another of the 18 Rahasyas of Piḻḻailōkācaryar and explains the meaning of the Dvaya Mantra.

Complete.

Beginning:

திருமந்த்ரத்தில் ஸ்வரூபம்சொல்லு[கு](கி)றது; ஸ்வரூபாநுரூபமான ப்ரபத்தியை விதிக்கிறது சரமஶ்லோகம். விஶ்வாஸரூபமான அநுஷ்டாநம் த்வயம். திருமந்த்ரம் ப்ராப்ய ப்ரதானமாயிருக்கும். சரமசுலோகம் ப்ராபகப்ரதானமாயிருக்கும். இவைத்தில்[ச்] சொல்லு[கு](கி)ற வ்யாப்யவ்யாபகங்களிரண்டிலும் ருசிவிசுவாஸங்களையுடையராயிருப்பாருடைய அநுஷ்டானரூபமாயிருக்கிறது த்வயம். அநுஷ்டானரூபமென்கிறது க்ரியாரூபத்தை அன்று. புத்தியாலேபண்ணும் அத்யவஸாயத்தை. ஜ்ஞாநவிஶேஷமாகையாலே ஜ்ஞாநாத்மகமாகவேணுமிறே.

End:

ஆக ஸ்ரீ என்று புருஷகாரஞ் சொல்லித்து. மத் என்று இப்புருஷகாரந்தான் நித்யயுக்தமென்னுமிடம் சொல்லித்து. * * * * நம: என்று அஹம் போக்தா, மம போக்யம் என்று பிறக்கும் கைங்கர்யவிரோதியைக் கழிக்கிறது. இதுதான் இரண்டு வாக்யமாய், இருபத்தஞ்சு திருவக்ஷரமாய் ஆறுபதமாய்ப் பத்தார்த்தமாயிருக்கும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இதுவும் பதினெட்டு ரஹஸ்யங்களுள் ஒன்றே. இதில் த்வயம் என்னும் மந்திரத்தின் பொருள் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இதற்கும் அச்சுப்பிரதியிலுள்ள பாடத்திற்கும் வேறுபாடு மிகவும் அதிகம். இந்தப் பிரதியில் இந்நூல் முழுதுமிருக்கிறது.

(*e*) தனிசரமம்.

TANICARAMAM.

Foll. 25*a*—50*b*.

This is another of the 18 Rahasya works of Piḷḷailōkācaryar, and treats of the meaning of Caramaśl̄ōka, which is the 66th stanza in the 18th Chapter of the Bhagavadgītā.

Complete.

Beginning:

ஸர்வேஶ்வரன் ஜகத்ஸ்ருஷ்டி பண்ணி வேதோபதேசத்தையும் பண்ணியருளி, [illegible] வேதகருடைய [illegible] ப்ரமாணமாக [illegible]ங்களையும், தத்த்வ[illegible]ங்களையுங் காட்டி அவ்வழியாலே தானே ஸாத்யமும் ஸாதநமும் என்கிற சாஸ்த்ரத்தையு முபதேசித்துவிடுகையன்றிக்கே பரவ்யூஹ விபவார்ச்சாவதாரங்களாலும் [illegible] சேஷ்டிதங்களாலும் தானே ரக்ஷகனென்னுமிடத்தையுங் காட்டி * * *

End:

ஆக இத்தால் ஸ்வீகாராங்கங்களையும் த்யாஜ்யதர்மவிசேஷங்களையும் * * * * *
* * * * ஸர்வஶிஷ்டவஸ்துவில் நிஸ்ப்ருஹனான அதிகாரியையும், ஸர்வோபாய[illegible]த்தையும், ஸர்வேஶ்வர[illegible]த்தையும், ஸர்வேஶ்வரனைப்பற்றின அதிகாரியினுடைய நைர்ப்பர்யத்தையும் சொல்லிற்றாய்த்து. வ்ரஜதி, [illegible]மாகையாலே [illegible]மென்றதாய்த்து 'வ்ரஜ' என்கிற ஸ்வீகாரவிசிஷ்டனுக்கு.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம். ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்காந்தே உக்தம் ப்ரதி க்ருஷ்ண:.

தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந ப்ரவர்த்தகம் ப்ரதிவர்த்தகம் |
ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச ஶ்ரோதவ்யம் ஶ்ராவ்யமேவ ச ||
ஶாஸ்த்ரமேவ ஶரணாகதம் ஸமாஶ்ரிதா: ||

(கு-பு.)—

இதுவும் பதினெட்டுரஹஸ்யங்களுள் ஒன்று. பகவத்கீதையின் இறுதியிலுள்ள ஸர்வதர்மாந் என்னும் சுலோகத்தின்பொருள் இன்னதெனப்பரக்கக் கூறுவது. இதில் முற்றும் இருக்கிறது.

(f) தத்த்வசேகரம்·

TAṬTVAŚĒKHARAM.

Foll. 51*a*—82*b*.

Another of the 18 Rahasyas of Piḷḷailōkācāryar, and treats of the true knowledge of God, of the soul and of the means of attaining salvation.

Complete.

Beginning:

[ஸ](ஸ)ர்வஸ்மாத்பரனாய் ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்தியுக்தனாய், ஸ்ருஷ்ட்யாதிவ்யாபாரவிலக்ஷணமாயிருந்துள்ள நிகிலசேதநஜாதத்துக்கும், சேதநாவஸ்தாவிஶேஷணங்களான ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்களுக்கும் க்ருத்யம் ஸகலஸம்ஸாரிசேதநர்க்கும் தத்த்வஜ்ஞானத்தை ஜனிப்பிக்கை.

End:

ஆக, [யி](இ)ப்படி நிகிலஹேயப்ரத்யநீகனாய் கல்யாணைகதானனாய் விபுவிலக்ஷணவேதவேத்ய நிகிலசேதநாசேதனங்களுக்கு, ஸர்வஸ்வாமியாய், மோக்ஷப்ரதனாயிருந்துள்ள நாராயணனுக்கு சேஷத்வைகநிரூபணீயரான ஸர்வ ஆத்மாக்களும் ஸர்வப்ரகாரபரதந்த்ரர். அவர்களுக்கு ஸ்வரூபாநுரூப புருஷார்த்த

ஷாயஶ்ச ஸகலபாஹ்யகார்யஶீஷ்டோபேக்ஷவிலக்ஷணமான பர
ஶாஸ்த்ரைகவேத்யம். தத்ப்ரதிபாதக நிகமார்ணோபாயம்
நிர்விஜ்ஞானஜாதஶரண்யநாராயணசரணாரவிந்தஶரணாகதிः
என்கிற ஜ்ஞான விஶேஷம் தத்வஜ்ஞானமாவது. ஶ்ரீகார்யவேதாந்தஃ.

* * * * * *

* * பஹுதான்ய ஸம்வத்ஸரம் ஆடி மீ 18 உ முடிந்தது.

தேவதாஸாரவஸித்யம் ஶஸ்த்ரீநவீ காஸ்யா |
விஷ்ணுவ்யாப்திஸ்வரூபாகாங்க்ஷீ ஸத்யோபாயோ ஹி வைஷ்ணவः ||
வகாஶீ தா விநிஶ்சித்ய தேவதாவிஷயாஸரோः |
ஸத்யோபாயம் ஸமம் க்ருஷ்ணவ்யாப்தௌ க்ருஷ்ணைகஸாயகம் ||

(தூ-பு.)—

இதுவும் 18 ரஹஸ்யங்களில் ஒன்றே. உண்மையான தத்துவப்பொருள் இன்னதென்றும் அதை அறியவேண்டும் உபாயம் இன்னதென்றும் கூறுவது. இதில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

(*g*) ரஹஸ்யத்ரயவிஷயவிசாரம்.

RAHASYATRAYAVIṢAYA VICĀRAM.

Fol. 83.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(*h*) மதுரகவி ப்ரஶ்நமும் வ்யாக்யாநமும்.

MADURAKAVI PRAŚNAMUM VYĀKHYĀNAMUM.

Foll. 84*a*—85*b*.

Contains the questions put by Madurakaviyāḻvār to Nammāḻvār and also the answers of the latter, together with a commentary on both.

Complete.

Beginning:

செ[ற்ற] (த்த)த்தின் வயிற்றிலே சிறுகுட்டி பிறந்தால் எத்தைத்தின்[னு](று)எங்கேகிடக்கும். கான[லேப](லோ)டிய காட்டிலே சிறியது பிறந்தால் அத்தைத்தின்[னு] (று) அங்கே கிடக்கும். இதுக்கு அர்த்தம்: செற்றது-விரோதி; அன்றிக்கே ஸர்வவிஷயஜ்ஞானமாகிற பிராணனுக்கு. யோக்கியதையில்லாத

அசித்தைச் செ(ா)ல்லுகிறதாகவுமாம். ஸம்ஸாராக்நிவிதீபநவ்ய பகதப்ராணாத்மஸஞ்ஜீவநீமென்று பகவத்ஜ்ஞாநத்தை (ப்) பிராணனாக அருளிசசெய்தாரிறே பாஷ்யகாரரும்.

End:

இவ்வர்த்தம் அறிந்த மதுரகவி, ஆழ்வாருடைய பக்த்யதிசயத்தைக்கண்டு * * * * * நமக்குண்டான ஜ்ஞாநவைஸத்யை ப்ரஶ்நபூர்வத்தாலே அறிவிக்கவே ப்ரத்யுத்தர மருளிச்செய்வரென்று நிச்சயித்து * * * * * அம்மந்த்ரசேஷார்த்தத்தையே உ[ள்க்](ட்)கொண்டு ப்ரத்யுத்தர மருளிச்செய்தாராய்த்து.

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இது, மதுரகவியாழ்வார் யோகநிலையிலிருந்த நம்மாழ்வாரை வினவிய வாக்கியத்திற்கும் அதன் மறுமொழிக்கும் பொருள் இன்னதென விளக்குவது. இயற்றியவர் இன்னாரெனத்தெரியவில்லை. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. இதன் பின்பு நாராயணம் ஸௌக்ஷ்மிகம் ப்ராப்த்ருகத்வாரணத்வயம் | உபாய ஹ்ருதி விஶ்வாஸோ த்வயார்த்தஸ்மரணாமதி: என்கிற சுலோகமும், பின்னர், பட்டர்முதலாகத் திருக்கச்சிநம்பி ஈறாகச் சிலஆசார்யர்களால் ஆராதிக்கப்பட்டுள்ள விஷ்ணுமூர்த்திகளின் திருநாமங்களும் எழுதப்பெற்றுள்ள ஏடு ஒன்று இருக்கிறது.

R. No. 95.

Palm-leaf. 13⅞×2 inches. Foll. 22. Lines, 12 to a page. Tamil and Grantha. Injured.

Presented by Śrīraṅganārāyaṇa Jīyar of Srirangam in 1911—12.

(*a*) மாணிக்கமாலை.

MĀṆIKKAMĀLAI.

Foll. 1*a*—10*a*.

This work explains the greatness and the importance of a religious teacher, his qualifications and the nature of his influence on the disciple. The author appears to be Periyavāccānpiḷḷai.

Complete.

Beginning :

தை³வாதீ⁴நம் ஜக³த்ஸர்வம் மந்த்ராதீ⁴நம் து தை³வதம் |
தந்மந்த்ரம் ப்³ராஹ்மணாதீ⁴நம் தஸ்மாத் ப்³ராஹ்மணதை³வதம் ||
என்கிறபடியே உப⁴யவிபூ⁴தியும் ஈசுவரனிட்ட வழக்கா யிருக்கும்; ஈசுவரன் திருமந்திரமிட்ட வழக்காயிருக்கும்; திருமந்திரம் ஆசார்யனிட்ட வழக்காயிருக்கும்; ஆகையாலே இத்திருமந்திரத்தால் பிரதிபாதிக்கு(ம்) ப்ராப்யப்ராபகங்களிரண்டும் ஆசார்யனாலே என்னத்தட்டில்லை. ஆசார்யன்வான் * *

End :

ஸத்த்வப்ரஸாத³ம் ஸத்த்வகார்யவியைப் பிறப்பிக்கும்; ஸத்த்வகார்யவி ஸ்வாசார்யாபி⁴மாநத்தைப் பிறப்பிக்கும்; * *
* * * * ஸச்சிஷ்யன், ஸதா³சார்யன் பக்கல் பண்ணும் விஶேஷஶ்ரவணம் ஸதா³சார்யப்ராப்திக்கே க்ஷமயிப்பிக்கும்; இவ்வர்த்தம் ஸதா³சார்யன் ஸந்நிதியுண்டாகவே தோன்றும்.

பெரியவாச்சா[ம்](ன்) பிள்ளை திருவடிகளே சரணம்.
ஶ்ரீமதே ராமாநுஜாய நம: * * * *

அப்பன் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இந்நூல் வைஷ்ணவஸம்பிரதாயத்தைச் சேர்ந்தது. நல்லாசிரியரின் இலக்கணமும் பெருமையும், அவரால் சிஷ்யர்கள் நல்வழியிற்றிருந்தி நல்லபேறு அடையும் விதமும் இதில் நன்கு கூறப்பட்டுள்ளன. இயற்றியவர் பெரியவாச்சான்பிள்ளையெனத்தோன்றுகிறது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

(*b*) த³ஶஶ்லோகீ.

DAŚAŚLŌKĪ.

Fol. 11.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(*c*) மாணிக்கமாலை.

MĀṆIKKAMĀLAI.

Foll. 12*a*—22*a*. Size, $18\frac{1}{4} \times 2\frac{1}{8}$ inches. Lines, 8 to a page. Same work as the one described in subdivision (*a*) above. Complete,

(கு-பு.)—

இதுமுன் பிரதிபோன்றது. முற்றுமிருக்கிறது.

அடியில்வரும் இவ்விரண்டுபாடல்களும் இந்நூலின் இறுதி ஏட்டின்கண் எழுதப்பெற்றுள்ளன.

தலையானவெட்டெழுத்திற்பிறந்து சரணாகதிதி[ய்]
முலையாரமுதில்வளர்ந்தபிரான் முடும்பைக்கதிபன்
மலையார் திருப்புயந்தான்[மா] மணவாளன்மலரடிக்கே
நிலையானநெஞ்சும்பெற்றேனும்பர்வரவுநிலைபெற்றதே.

அகாரத்தினுட்[ப்]பொருள்மாலிருஞ் சோலையழகருக்கு
மகாரத்தினுட்[ப்]பொருளாமடியேனை மதியுடையோர்
உகாரத்தினுட்பொரு[ளுக்](ட்)காக்கிவைத்தாரொருநாளு மினி
விகாரத்தைநல்கும்பிறப்பெங்[க](ந)னேகொல்வந்தெய் [துவதே.

R. No. 96.

Palm-leaf. $14\frac{7}{8} \times 1\frac{1}{8}$ inches. Foll. 45. Lines, 6 to a page. Tamil and Grantha. Fair.

Presented by Śrīranganārāyaṇa Jīyar of Srirangam in 1911—12.

ஸப்தகாதா வ்யாக்யானம்.

SAPTAGĀDHĀVYĀKHYĀNAM.

This contains a copious commentary on the Saptagādhā of Viḻāñjōlaippiḻḻai, which consists of 7 Tamil stanzas containing the gist of the teachings of Piḻḻailōkācāryar as given in his Śrīvacanabhūṣaṇam.

Complete.

Beginning:

உலகங்கட்கெல்லாம் ஒருயிரான திருவரங்கச்செல்வனார்க்குங்கூட ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம் என்கிற திருமுகப்படியே மிகவும் தாரகராய்க்கொண்டு அனைவரும் உஜ்ஜீவிக்கும்படி அத்திகிரியருளாளர் அநுமதிமுன்னாக ஸ்வீகரித்தருளின ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்திவிஸ்தாரஸங்க்ரஹமான ஸப்தகாதை

ரணவர்யேயவர்ரோதூலெவைஷவங்களை ஸவர்காரமாகவும், ஸ வர்ரணமாகவும் பிரகாசிப்பித்தருளின பிள்ளைலோகாசார்ய ருடைய திருவடிகளிலே ஆஶ்ரயித்து * * * * * * * * * * * உடைய வர்க்கு(ப்) பிள்ளையுறங்க(ா)வில்லிதாஸரைப்போலவும் * பிள்ளைலோகாசார்யருக்கு ஶூதஸரோயும், வ்ராணஸரோயும் * * * * விளாஞ்சோலைப்பிள்ளை வகுளபூஷண சாஸ்த்ரஸாரமாய், வாரேஹஸ்யமாயிருந்துள்ள ஸ்ரீவசநஹூ ஷணதிவ்யஶாஸ்த்ரத்திலே பரக்கச்சொன்ன விசேஷங்களை யெல்லாம் தம்முடைய பரமகிருபையாலே அனைவர்க்கும் ஸு ரஹமாம்படி * * * * * * * * கஉவயொமிதயா பரக்கப் பிரதிபாதிக் கிற அர்த்தவிசேஷங்களையும் பரப்பற ஏழுபாட்டாலே ஸங்க்ர ஹித்து 'வாழியவன்முதலாயமொழிகள்' என்னும்படி ஸவெ ஹொரஹ்யமாயிருந்துள்ள ஸவ்தரமாயா என்கிற இப்பிரபந்த முகத்தாலே அருளிச்செய்கிறார். அதெங்[க](ங)னே யென் னில் :—வேதார்த்தம் * * * * * * * * * * *

சுவஶ்யஜ்ஞாதவ்யதயா அறுதியிடப்பட்ட சுயஉவஷகத் தை நேராக உபதேசிக்குமவனே ஸஉாவாயனென்று திருவுள்ளம்ப[த்தி](ற்றி) அருளிச்செய்கிறார் அம்பொன்ன ரங்கர்க்குமித்யாதி. ஸம்ஸாரிகள் தங்களையும் ஈஶ்வரனையும் மறந்தித்யாதியாலே, சுயஉவஷகத்தை உபதேசித்தருளுமவ னே ஆசார்யனென்று பிள்ளைலோகாசார்யரும் அருளிச்செய் தாரிறே. இவருமத்தை அடியொத்திக்காட்டுவன(ன்)றோ ஆசார்யனென்கிறார் ; பிள்ளையை அடியொற்றுமவர் இவரொ ருவருமேபோலேகாணும். பே[சுத்தே](சிற்றே)பேசும் ஏக கண்டராயிருக்குமிருப்புள்ளது நம்முதலிகளுக்கேயிறே.

End :

ஆக இப்பிரபந்தத்தால் சுயஉவஷகோவஉேஷாவே ஆசார்யனென்னுமிடத்தையும், அவனிடத்தில் ப்ரேமமற்றி ருப்பார் ஸூவாதகரென்னுமிடத்தையும் * * * ஶூவாயன்பக்கல் வெரயேஹூனவன் அர்ச்சிராதிமார்க்கத் தாலேபோய், பரமபதத்திலே சென்று முக்தைஶ்வர்யத்தைப் பெற்று, கைங்கர்யஸாம்ராஜ்யத்திலே ஶேஷயஹிஷிக்தனாய்க் கொண்டு யாவஉாதஹாவியாக இருப்பனென்னுமிடத்தையும்

அருளிச்செய்து நின்றாராய்த்து. விளாஞ்சோலைப்பிள்ளை திரு
வடிகளே சரணம். ஜீ[ய்]யர் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இது, விளாஞ்சோலைப்பிள்ளை இயற்றின ஸப்தகாதை என்னும் நூலின் விரிவுரை. பிள்ளை லோகஞ்சீயரியற்றிய வியாக்யானத்திலும் விரிவானது. உரையாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

R. No. 97.

Palm-leaf. 20×1½ inches. Foll. 76. Lines, 6-8 to a page. Grantha and Tamil. Injured.

Presented by Śrīraṅganārāyaṇa Jīyar of Srirangam in 1911—12.

(*a*) ஸம்ப்ரதாயசந்த்ரிகா.

SAMPRADĀYACANDRIKĀ.

Foll. 1*a*—27*b*.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(*b*) தத்வத்ரயவ்யாக்யான அரும்பதம்.

TATTVATRAYAVYĀKHYĀNA ARUMPADAM.

Foll. 28*a*—36*a*.

A gloss on Maṉavāḷamāmuni's commentary on the Tattvatraya of Piḷḷailōkācāryar, described under R. No. 20 *ante*.

Complete.

Beginning:

‘ஸம்ஸ்வரோஹம்’ என்கிற ஶ்லோகத்தில் ஸுகம் ஹாநீ, ஸம்ஸாரோஹம் என்கிறது, ஹாநஸம்ஸாரங்களான விஷயங்களையும், தத்ரூபமான ஆநந்தத்தையும் சொல்லுகிறது.

End:

ஸ்ரீத்ராணாயேத்யாதிக்கு ஈட்டிலே நிர்வகித்த ப்ரகார(ம்) பாஷ்யத்திலே நிர்வகித்த ப்ரகாரமாகையாலே [ரெ]இரண்டும் எம்பெருமானார் நிர்வாகமே. ஸ்ரீ: ஓம். ராமாநுஜாய நம:.

ஸ்ரீமதே ரம்யஜாமாத்ருமுநயே நம:. ஜீயர்திருவடிக[ளிலே] (ளே) சரணம்.

(கு-பு.)—

இது மணவாளமாமுனிகள் இயற்றிய தத்த்வத்ரய வியாக்யானம் என்னும் நூலின் குறிப்புரை. இந்தப் பிரதியில் முழுதுமிருக்கிறது. இதனை இயற்றியவர் இன்னாரென்த் தெரியவில்லை.

(*c*) ஸ்ரீஸ்தவவ்யாக்யானம்.

ŚRĪSTAVAVY KHYĀNAM.

Foll. 37*a*—38*b*.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(*d*) அர்ச்சாவதாரப்ராமாண்யம்.

ARCCĀVATARAPRĀMĀṆYAM.

Foll. 39*a*—40*a*.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(*e*) வைஶ்வதேவ விஷயம்.

VAIŚVADĒVA VIṢAYAM.

40*b*—42*b*.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(*f*) திருமந்த்ரார்த்த அரும்பதம்.

TIRUMANTRĀRTHA ARUMPADAM.

Foll. 43*a*—69*b*.

Same as the work described under R. No. **56** *ante*.

Contains the commentary relating to the latter part of the first Prakaraṇa.

(கு-பு.)—

இது 56-வது நம்பர் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில், திருமந்திரம் என்னும் முதற்பிரகரணவியாக்யான அரும்பதத்தின்பிற்பகுதிமட்டுமே இருக்கிறது. இதில் 32 என்னும் எண்ணமைந்த எடு முதலேடாகவுள்ளது.

(g) பிரபந்நாநுஷ்டானம்.

PRAPANNĀNUṢṬHĀNAM.

Foll. 70*a*—76*a*.

This contains the teachings of Tiruvēṅgaḍa-Rāmānujajīyar of Vānamāmalai regarding the ritualistic acts to be performed by a Prapanna *i.e.* by one who has surrendered himself to God with the object of attaining salvation.

Complete.

Beginning:

ஸகலஶாஸ்த்ரவிஶாரதராய் ஆழ்வாராளவந்தாரெம்பெருமானார்மணவாளமாமுனிகளுடைய அவதாரவிசேஷமென்[ற](ன)லாம்படி எழுந்தருளியிருக்[கு](கி)ற வானமாமலை திருவேங்[கி](க)ட[ரு](ரா)மாநு(ஜ) ஜீயருடைய திருவடிகளிலே இ[றெ](ர)ண்டு ஸ்ரீவைஷ்ணவ[ற](ர்)கள் தெண்ட(ம்) ஸமர்ப்பித்து அடியோங்களுக்கு பிரபந்நாதிகாரிகளுக்கு க்ரு ஹ்யாவாஸெயகலிவிஹா(ம)த்தைப்பண்ணித் தந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, ஜீயரும் திருவுள்ளமுகந்து, [யி](இ)தை[ரு](நா) மே[வொ](உ)ங்களுக்கு அ[ரி](றி)விக்கவேணுமென்று இருந்தோம். * * * * * * பிரபந்நாதிகாரியானவன் இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்டநிவாரணத்துக்கும் உபாயமாவான் ஈஶ்வரனொருவனேயென்று ஸுவ்யவஸி[ற்றி](த்தி)ருப்பானாய் அவனையே உபேயமென்று அத்யவஸித்திருப்பானொருவனிறே.

End:

[யி](இ)னி ரஹஸ்யங்களிலும் வர்ணாஶ்ரமாயிரா(?) அநுகுணமாக ப்ராப்தங்க(ளா)ன கர்மங்க[ளுக்கிற்](ளில்) கைங்கர்யத்வாகாரம் கல்பிக்கலாவது; அது ஸ்ரீபாஞ்சராத்ரஸித்தமாகையாலே பிரபந்நாதிகாரிக்கு நித்தியநித்யமே அநுஷ்டேயமென்றதா[ய](யி)ற்று. ஜீயர் திருவடிகளே சரணம்.

ஹரி: ஓம். ஸ்ரீமதே ராமானுஜாய நம:.

(கு-பு.)—

இந்நூல் வைஷ்ணவ ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தது. இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் வானமாமலை திருவேங்கடராமாநுஜர் என்னும்ஸந்நியாஸியைப் பிரபந்நாநுஷ்டானம்இன்னதெனத்

தெரிவிக்கவேண்டுமென்றுவேண்ட அவர் சொன்னதாக எழு தப்பட்டுள்ளது இது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 98.

Palm-leaf. 17 × 1½ inches. Foll. 177. Lines, 6-9 to a page. Tamil and Grantha. Injured.

Presented by Śrīraṅganārāyaṇa Jīyar of Srirangam in 1911—12.

ரஹஸ்யத்ரயஸாரடீகா—ஸாராஸ்வாதிநீ.

RAHASYATRAYASĀRAṬĪKĀ—SĀRĀSVĀDINĪ.

This is a commentary by Vēdānta-Rāmānuja on Vēdāntadēśika's Rahasyatrayasārasaṅgraha.

Contains only the first seven Adhikāras.

Beginning :

ரஹஸ்யத்ரயஸாரடீகாஸாராஸ்வாதிநீ. ஶ்ரீஹயக்ரீவாய நம꞉.

ஶ்ரீமாந் வேங்கட ... ஸதா ஹ்ருதி ||

ஸாக்ஷாந்நாராயண(ம்)தேவஸேவ்ய(பெ)க்ஷகதீக்ஷயா |
அவதீர்ணம்வேதந்த்யாம் ஶ்ரீரங்கநாயக ரஹஸ்யம் பஜே ||

